பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 26 புதன்கிழமை 09.04.2025 | அதிர்வு 249

## பிள்ளையான் கைது: தமிழரசு வரவேற்பு!



முன்னாள் இராஜாங்க அமைச்சரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பிள்ளையானிடம் விசாரணைகள் ஆரம்பம்

## கிழக்கு பல்கலை முன்னாள் உபவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில்



பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தனிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான அவர், மட்டக்களப்பில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து நேற்று மாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு இரவு கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். 03▶




# வடக்கில் 56 பாடசாலைகள் விரைவில் மூடப்படும் நிலை

## அவற்றில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்கின்றனர்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தின் 13 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து 56 பாடசாலைகளை விரைவில் மூடுவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஐம்பதுக்கும் குறைந்த மாணவர்கள் கல்வி கற்கும் 266 பாடசாலைகள் உள்ளன என்ற 02▶



## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்: பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை உண்மைக்குப் புறம்பான 03▶

## அமெ. வரி குறித்து ஆராய நாளை சர்வகட்சிக் கூட்டம்

(எஸ்.ஜினோதன்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நாளை சர்வகட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு அமெரிக்க



44 சதவீத வரியை விதித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காகவே சர்வகட்சிக் கூட்டம் இடம்பெறவுள்ளது.




# வேகமாக வந்த வான் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் பலி

குருநாகலில் இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நிக்கவரெட்டிய, ரஸ்நாயக்கபுர பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நிக்கவரெட்டிய, ரஸ்நாயக்கபுர பகுதியில் வேகமாகப் பயணித்த வான் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பொலிஸ் சோதனைச் சாவடியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, சோதனைச் சாவடியில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வீட்டின் மதிலை உடைத்துப் புரண்ட கள்ள மண் ஏற்றிய டிப்பர் வாகனம்

## பொலிஸார் விரட்டிய வேளை சம்பவம்



**(ந.லோகதயாளன்)**

கள்ள மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் விரட்டிய சமயம் அதிவேகமாக ஓடித் தப்ப முயன்றபோது நல்லூர் பகுதியில் வீட்டின் மதிலை உடைத்துக்கொண்டு புரண்டது.

பூநகரிப் பகுதியில் பொலிஸாரின் வீதித் தடையில் நிறுத்தாமல் சென்ற மணல் ஏற்றிய டிப்பர் வாகனம் தொடர்பில் இன்று அதிகாலை சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் அந்த டிப்பர் வாகனத்தை வழிமறித்தனர். எனினும் அந்த வாகனம் நிற்கவில்லை. இதையடுத்து நாவற்குழிப் பகுதியில் இருந்து பொலிஸார் டிப்பர் வாகனத்தை விரட்டினர்.

பொலிஸார் விரட்டியபோதும் டிப்பரை நிறுத்தாமல் சாரதி தொடர்ச்சியாகத் தப்பியோடினார்.

நல்லூர் பகுதியில் டிப்பர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீட்டின் மதிலை உடைத்தவாறு புரண்டது. இதன்போது சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வடக்கில்...**

அதிர்ச்சித் தகவலை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதும் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளை, 3 கிலோ மீற்றருக்குள் வேறு பாடசாலையிருப்பின் அவற்றை மூடுவதற்குத் தற்போதைய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கில் தற்போதுள்ள 13 கல்வி வலயங்களிலும் 981 பாடசாலைகள் இயங்குகின்றன. இந்த 981 பாடசாலைகளில் 2 இலட்சத்து 29 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கே 981 பாடசாலைகள் உள்ளபோதும் அவற்றில் 454 பாடசாலைகளில் ஒவ்வொன்றிலும் 100 க்கும் குறைந்த மாணவர்களே கல்வி கற்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதிலும் மிக மோசமான நிலைமையாக 266 பாடசாலைகளில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்கின்றமையும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

266 பாடசாலைகளில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கின்றபோதும், 3 கிலோ மீற்றர் தூரத்துக்குள் வேறு பாடசாலைகள் இல்லாத நிலை, கடல் கடந்த சூழல், விசேட தேவை என்பவற்றைக் கருத்தில்கொண்டு மூடப்படவேண்டிய பாடசாலைகளுக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மூடப்படும் நிலையில் வடக்கில் 56 பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் ஐம்பதுக்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 95 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 20 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 41 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 72 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 37 பாடசாலைகளும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் வடக்கில் மூடப்படும் நிலையில் காணப்படும் 56 பாடசாலைகளிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிக பாடசாலைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஈஸ்டர்...**

முறையில் மேற்கொண்ட குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் மட்டக்களப்பு, கரடியனாறு பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இவர், 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மட்டக்களப்பு, வவுணதீவு பகுதியில் 2 பொலிஸ் அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.” – என்றார்.

**பிள்ளையான்...**

(பிள்ளையான்) கைது செய்யப்பட்டமையைத் தாம் வரவேற்கின்றார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

எந்தக் குற்றத்துக்காகப் பிள்ளையான் கைது செய்யப்பட்டாரோ அது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பிலும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சாணக்கியன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

**பிள்ளையானிடம்...**

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே பிள்ளையான் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி, கொழும்பு 7இல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்குபற்றி இருந்தபோது, பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 18 ஆண்டுகளுக்குப் பின்னர் பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பிள்ளையான் கைது செய்யப்பட்டதை அடுத்து மட்டக்களப்பில் பல இடங்களில் பட்டாசு கொளுத்திக் கொண்டாடப்பட்டது.



# பிணை நிபந்தனையைப் பூர்த்தி செய்த வியாழேந்திரன் பிணையில் விடுவிப்பு

(எஸ்.ஜினோதன்)

பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தமையைத் தொடர்ந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவரைக் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிபதி தனுஜா லக்மாலி பிணையில் விடுவிக்குமாறு நேற்று உத்தரவிட்டிருந்தார்.



எனினும், பிணை நிபந்தனைகளை முறையாகப் பூர்த்தி செய்யாமையின் காரணமாக அவர் மீண்டும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார்.

இலஞ்சம் பெறுவதற்கு உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டில் இவர் அண்மையில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சதாசிவம் வியாழேந்திரனைப் பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பலிக்கடாக்கள்...!

நேற்று முதல் ஓய்வுபெற்றுச் செல்லும் நாட்டின் கணக்காய்வாளர் நாயகம் சூலந்த விக்ரமரத்ன ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

பல ஊழல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளில் சில அரசு அதிகாரிகளின் நேரடித் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளதாகப் பதவி விலகும் அவர் கூறுகிறார்.

இலங்கையின் 41 ஆவது கணக்காய்வாளர் நாயகமாக 2019 முதல் 6 ஆண்டுகள் பணியாற்றி வந்த சூலந்த விக்ரமரத்ன தனது பதவிக் காலத்தை முடித்து நேற்று ஓய்வு பெற்றார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊழல் தொடர்பான சம்பவங்களுக்குப் பெரும்பாலும் அரசியல்வாதிகள் மீது குற்றம் சாட்டப்படுவதாகக் கூறினார்.

"இருப்பினும், பெரும்பாலான வழக்குகள் தொடர்பான விசாரணைகளில் சில அரசு அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. காசோலைகள் மற்றும் வவுச்சர்களில் கையொப்பமிடுவது அனைத்தையும் அரசியல்வாதிகளால் மட்டும் செய்ய முடியாது, ஆனால் அவை அரசு அதிகாரிகளால் செய்யப்படுகின்றன. இதை விரைவில் நாம் கவனிக்காவிட்டால் நிலைமை மேலும் மோசமாகும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு பொருத்தமான அமைப்பை உருவாக்குவது பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழு ('கோப்' குழு) மற்றும் பொதுக் கணக்குகள் தொடர்பான நாடாளுமன்றக் குழு ('கோபா' குழு) மூலம் மட்டுமே சாத்தியமாகும்'' என்று அவர் கூறினார்.

"புதிய 'கோப்' குழு மற்றும் 'கோபா' குழு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பணியாற்ற உறுதிபூண்டுள்ளன. கணக்காய்வாளர் நாயகம் இங்கு முக்கிய பங்கு வகிக்கிறார். அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது மட்டுமல்லாமல், சாத்தியமான இடங்களில் நடவடிக்கை எடுக்கவும் தண்டனைகளை விதிக்கவும் கூடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்'' என்று அவர் மேலும் கூறினார்.

உயர் அதிகாரிகள் மட்டத்தில் ஒத்துழைப்பும், ஒத்தாசையும், கரவு நடவடிக்கைகளுக்கு இணக்கமும் கிடைக்காவிட்டால் அரசியல்வாதிகளால் ஊழல், மோசடி, முறைகேடுகளைச் செய்ய முடியாது என்பது தெரிந்த விடயம்தான்.

அதிமேதாவிகளான அரசியல்வாதிகள் குற்றச்சாட்டுக்கள் தங்கள் மீது நேரடியாக விழாமல் சமாளிப்பதற்காக இடையில் சிக்கும் அதிகாரிகளை வசமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஊழல், மோசடிகளில் தங்களுக்கும் கணிசமான தரகுப் பணம் கிடைக்கும் என்ற நப்பாசையிலும், அரசியல்வாதிகளின் நட்பு, தொடர்புகளைப் பேணவும் அதிகாரிகள் இத்தகைய முறைகேடுகளுக்குப் பல சமயங்களில் தாமே வலிந்தும், சில சமயங்களில் வற்புறுத்தல்களுக்கு பயந்தும் இணங்கிப் போகின்றார்கள்.

கடந்த காலங்களில் பெரும் ஊழல், மோசடி, முறைகேடுகளில் ஈடுபட்டு, பல்லாயிரம் கோடி ரூபாவை ஏப்பமிட்ட பல அரசியல்வாதிகள் இன்றும் சட்ட வலைக்குள் சிக்காமல் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அதிகாரிகளைப் பகடைக்காய்களாக பயன்படுத்தி தங்களை பாதுகாத்துக் கொண்டு அவர்கள் மேற்கொண்ட ஊழல் தந்திரோபாயம்தான்.

இத்தகையோரை மடக்குவதை விட்டு, எய்தவன் இருக்க அம்பை நோவது போல, இடையில் சிக்கிய அதிகாரிகள் மாட்டிக் கொள்கிறார்கள்.

உண்மையை அதிகாரிகள் வெளிப்படுத்தத் தயாரானாலும் அதற்கான சான்றுகள், சாட்சியங்கள், ஆவணங்கள், ஆதாரங்கள் அவர்களுக்கு கிட்டுவதில்லை. தங்களைச் சம்பந்தப்படுத்தும் விதத்தில் அத்தகைய சாட்சியங்கள், ஆதாரங்களுக்கு இடமே விட்டு வைக்காமல்தான் பெரும்பாலும் அரசியல்வாதிகள் இப்படி ஊழல், மோசடிகள், முறைகேடுகளைக் கனகச்சிதமாக முன்னெடுக்கிறார்கள்.

பல சமயங்களில் பெரும் ஊழல் செய்த அரசியல்வாதிகள் எப்படி வெளியில் - பாதுகாப்பாக - சுதந்திரமாக - சட்டத்தின் பிடியில் சிக்காமல் - தப்பி இருக்கிறார்கள் என்று மக்கள் ஆச்சரியப்படுவதற்கு பின்னால் பொதிந்து கிடக்கும் இரகசியம் இதுதான்.

இடையில் பலிக்கடாக்களாகும் - பகடைக்காய்களாகும் - அதிகாரிகள் இனிமேலாவது புதிய அரசு நிர்வாகத்துடன் ஒத்துழைத்து - உஷாராக - செயல்பட்டால்தான் மோசடி அரசியல்வாதிகளை சட்டவலைக்குள் சிக்க வைக்கலாம். இல்லையேல் அவர்கள் சுதந்திரப் பறவைகளாகத் திரிய, அவர்களுக்கு உதவி, ஒத்தாசை வழங்க முன் வந்த அதிகாரிகள் கம்பி எண்ண வேண்டியதுதான்!

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE





# ஆசைவார்த்தை பேசி ஆட்சி பீடம் ஏறியவர்கள் மலையக மக்களை அடியோடு மறந்துவிட்டனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு ஆசை வார்த்தைகளைப் பேசியவர்கள் – ஜனாதிபதி உள்ளிட்ட ஏனையவர்கள் – தற்போது ஆட்சி பீடம் ஏறியதும் மலையக மக்களை அடியோடு மறந்து விட்டனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நோர்வூட் பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் படுத்தும் நிகழ்வு பொகவந்தலாவ தண்டாயுதபாணி ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார் .

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் உட்பட மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் விஜயசந்திரன். தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி பொதுச்செயலாளர் பழனிவேல் கல்யாணகுமார் மற்றும் பெருந்திரலான ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளத்தை அதிகரிப்பதாக வரவு – செலவு திட்டத்தின் வாசிப்பின் போது இந்த அரசு கூறியது. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. மலையக மக்கள் குறித்து அனுபவம் உள்ள எங்களது தொழிற்சங்கங்களுக்கு மாத்திரம்தான் அக்கறை உள்ளது. புதிதாக வந்த கட்சிகளுக்கு மலையக மக்கள் குறித்து எவ்வித அக்கறையும் கிடையாது.

தேசிய மக்கள் சக்தியில் உள்ள தமிழ் பிரதிநிதிகளுக்கு மலையக மக்கள் தொடர்பாக அதிகமாக பேச முடியாது. தற்போது உள்ள அரசு ஊழல் செய்தவர்களை ஒவ்வொரு மாதத்துக்கு ஒரு பட்டியலை தயார் செய்கின்றனர். மதுபான சாலைகள் வைத்திருப்பவர்கள் எரிபொருள் நிரப்பு நிலையம் வைத்திருப்போர்களை பட்டியலிட்டு ஊழல்வாதிகள் என கூறி விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். தமிழ் முற்போக்கு கூட்டணியை பொருத்தவரையில் நாங்கள் மக்களுக்கு நேர்மையாக சேவை செய்திருக்கின்றோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் எவரும் பணம் செலவு செய்ய வேண்டியதில்லை. கடந்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பணம் செலவு செய்யவில்லை. ஆனால் மக்கள் அவர்களுக்கு வாக்களித்துள்ளார்கள்.

வாசிக்கப்பட்ட வரவு – செலவு திட்டத்தில் 4500 மில்லியன் ரூபா இந்திய அரசு கொடுத்த நிதியாகும் மிகுதி எஞ்சியுள்ள 2500 மில்லியன் ரூபா நிதியை வைத்துக்கொண்டு முழு மலையகத்துக்கும் சேவை செய்வது என்பது கடினமான விடயமாகும்.

இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எமது தாய் தந்தையரின் பிள்ளைகள் போட்டியிடுகின்றனர். ஆகவே அவர்களுக்கு வாக்களித்து தோட்ட தொழிலாளியின் பிள்ளைகளை உள்ளூராட்சி மன்ற தலைவர்கலாகவும் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்ய வேண்டும்.– என குறிப்பிட்டார்.



## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# திசைகாட்டிக்கு வாக்கு சேகரிப்போர் இறைவனுக்கு பதிலளிக்க வேண்டும்

### சுயேச்சை முதன்மை வேட்பாளர் றுக்சான்

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் விரோத போக்கை அரசு கைவிடாமல் ஜனாதிபதியை முஸ்லிம் பிரதேசங்களுக்கு அழைத்து வருவதால் பயன் ஏதும் இல்லை என்பதை தேசிய மக்கள் சக்தியின் முஸ்லிம் செயற் பாட்டாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அக்கரைப்பற்று மாநகர சபை தேர்தலில் ஒட்டகச்சிவிங்கி சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சை குழுவின் முதன்மை வேட்பாளர் எம்.எம். றுக்சான் மக்கள் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட போது,

தேசிய மக்கள் சக்தி அரசு ஆரம்பித்த காலத்திலிருந்து இதுவரை முஸ்லிம்கள் மீதான புறக்கணிப்புத் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. கிழக்கு மாகாண



சபையில் ஆரம்பித்த புறக்கணிப்பு அமைச்சரவையில் முஸ்லிம்களுக்கான இடம் தரப்படாமல் அதன் பின்னர் அனைத்து விடயங்களிலும் முன்னுக்கு பின் முரண்பாடான போக்குடன் அரசு நடந்து கொண்டு வருவதால் மக்கள் அதிருப்தியில் இருக்கின்றனர்.

அண்மையில் இஸ்ரேல் நாட்டுக்கு எதிராக றுஸ்தி எனும் இளைஞன் ஸ்டிகர் ஒட்டினார் என்பதற்காக 90 நாள்கள் பயங்கரவாத தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார். அதேவேளை பாலஸ்தீன மண்ணில் குண்டு மழை பொழிந்து உடல்கள் சிதறுகின்ற காட்சிகளையும் ஓலங்களையும் காண்கிறோம் பயங்கரவாதியான கொலைகாரனுக்கு எதிராக ஸ்டிக்கர் ஒட்டிய இளைஞனை கைது செய்ததன் ஊடாக இந்த நாட்டில் முஸ்லிம்களை அரசு கேவலப்படுத்தி இருக்கிறதா?

எம்மை இன்னும் முட்டாள்களாக்க திசைகாட்டி முனைவது எதற்காக என புரியவில்லை? ஓரின சேர்க் கையாளர்களது விடயம், இஸ்லாமிய திருமணச் சட்டத்தின் மீதான காய் நகர்த்தல் என்பனவும் முஸ்லிம்கள் மீதான இஸ்லாத்தின் மீதான பாரிய முரண்பாடான செயற்பாடாகும்.

எனவே திசைகாட்டிக்கு வாக்கு சேகரிப்பதால் நாம் இறைவனிடமும் பதில் சொல்ல வேண்டி வரும்.- என்றார்.



# கல்குடாத்தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களுடன் விஷேட சந்திப்பு

(எஸ். சினீஸ் கான்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான சந்திப்பு அமைப் பாளரும் வேட்பாளருமான சட்டத்தரணி ஹபீப் றிபான் இல்லத்தில் இடம்பெற்றது.

முஸ்லிம் காங்கிரஸின் கல்குடாத் தொகுதி அமைப்பாளரும் ஓட்டமாவடி முதலாம் வட்டார வேட்பாளருமான ஹபீப் றிபான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் கோறளைப்பற்று, வாழைச் சேனை மற்றும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி, கோறளைப்பற்று வடக்கு வாகரை ஆகிய பிரதேச சபைகளுக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் பட்டியல் வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது தேர்தல் பிரசார முன்னெடுப்புக்கள், நடவடிக்கைகள் தொடர் பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# அநுர நாட்டின் ஜனாதிபதியான பின்னரும் மன்னாரில் சட்டவிரோத கனிய மணல் அகழ்வு!

## திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்கிறார் டானியல் வசந்

(மன்னார் நிருபர்)

அநுர குமார திசநாயக் நாட்டின் ஜனாதிபதியாக வந்த பின்னரும் மன்னாரில் சட்டவிரோத கனிய மணல் அகழ்வுக்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ கட்சியின்) மாவட்ட அமைப்பாளர் டானில் வசந் தெரிவித்துள்ளார்.



ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்ற நிலையில் மத்திய அரசும், ஜே.வி.பி கட்சியும் வடக்கு கிழக்கில் போட்டியிடுகின்றன.

இந்த நிலையில் சூழ்ச்சியான சில நடவடிக்கைகளை அவர்கள் இந்தத் தேர்தலில் முன்னெடுத்து வருகின்றனர். எம்மை கட்டுப்படுத்தி அதிகாரத்தை அதிகாரத்தை செலுத்துவதற்கான ஒரு சூழ்ச்சியை இந்தத் தேர்தலில் பயன்படுத்துகின்றனர்.

நானாட்டான் பிரதேச சபை தேர்தலில் போனஸ் ஆசனமாக ஒரு சிங்களவரை நியமித்துள்ளனர்.

இந்தத்தேர்தலில் வட்டாரங்களில் அவர்களால் வெற்றி பெற முடியாது என்று நன்றாக தெரியும். தமக்குக் கிடைக்கும் வாக்குகளை வைத்து போனஸ் ஆசனத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நோக்குடன் சிங்களவர்களைப் போனஸ் ஆசனத்தில் நிறுத்தி உள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் இயற்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற நாசகார திட்டங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களை பயன்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது.

மன்னார் பிரதேச சபை பிரிவில் கனிய மணல் அகழ்வுக்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.ஜே.வி.பி. அரசு, இயற்கைக்கு எதிராக எவ்வித திட்டங்களையும் முன்னெடுக்க மாட்டோம் என்று கூறுகிறது.

ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் மன்னாரில் பல தடவைகள் கனிய மணல் ஆராய்ச்சிக்காக பாதுகாப்பு தரப்பினரின் பாதுகாப்புடன் இங்கு வருகை தந்துள்ளனர்.- என்றார்.



# மட்டக்களப்பில் காப்புறுதி செய்யப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டுக்கள் கையளிப்பு!

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பில் நான்கு சபைகளுக்கான 3657 காப்புறுதி செய்யப்பட்ட அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் அஞ்சல் திணைக்கள அதிகாரியிடம் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (07) கையளிக்கப்பட்டன.

ஆரம்ப கட்டமாக மண்முனை மேற்கு, ஏறாவூர் நகர், மண்முனை தென் எருவில்பற்று, கோறளைப்பற்று மேற்கு ஆகிய சபைகளுக்கான காப்புறுதி செய்யப்பட்ட அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் கையளிப்பு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் உள்ளூர் அதிகார சபை தேர்தல் மே மாதம் 06 திகதி இடம்பெறவுள்ள நிலையில் மாவட்டத்தில் 11554 உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

அஞ்சல் வாக்கு அடையாளம் இடும் தினங்களாக – எதிர்வரும் 22 ஆம் திகதி மாவட்ட செயலகம், மாவட்ட தேர்தல்கள் அலுவலகம், பொலிஸ், விசேட அதிரடிப்படை, பாதுகாப்பு பிரிவுகள்.

23,24 ஆம் திகதிகள் எனைய அரச நிறுவனங்கள், முப்படைகள்.

28, 29 ஆம் திகதிகள் மீள்வாக்களிப்பு. மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திலும் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் உதவித் தேர்தல்கள் ஆணையளர் எம்.பி.எம் சுபியானும் கலந்து கொண்டார்.






# துருக்கி தூதரகம் நடத்திய போட்டியில் புத்தளம் ஸாஹிரா மாணவர்கள் வெற்றி

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

துருக்கி தூதரகம் நடத்திய மை மெமோரியல் ரமழான் எனும் தலைப்பிலான கட்டுரை மற்றும் சித்திர போட்டிகளில் புத்தளம் ஸாஹிரா ஆரம்ப பாடசாலையின் தரம் 05 மாணவர்களான மொகமட் சாஜீத் பாத்திமா முனா கட்டுரை போட்டியில் முதலாம் இடத்தையும், றினாஸ் மொஹமட் றுபை ஈமன் சித்திர போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் ஞாயிற்றுக்கிழமை (06) கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலிஹ் மற்றும் துருக்கி தூதரக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.






# கற்றாழை பயிர் செய்கையை ஊக்கப்படுத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிப்பு

**(நூருல் ஹுதா உமர்)**

கிராமிய பெண்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக வேள்வி பெண் அபிவிருத்தி ஒன்றி யத்தின் ஊடாக கற்றாழை பயிர் செய்கையை ஊக்கப்படுத்துவதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான ஆரம்பம் நிகழ்வு கல்முனை வை.எம்.சி.ஏ. கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

வேள்வி ஒன்றியத்தின் தவிசாளர் றிலீபா பேகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை கரையோர பிரதேசங்களின் அபிவிருத்தி குழு தலைவருமாகிய ஏ.ஆதம்பாவா பிரதம அதிதியாக கலந்து கொண்டு இயற்கை உணவின் முக்கியத்துவம், பெண்களின் சுயதொழில் அபிவிருத்தி பற்றியும் தெளிவுபடுத்தினார்.

அதேபோன்று அரசின் ஊடாகப் பெண்களின் சுயதொழில்



தொடர்ச்சி ▼

# கற்றாழை பயிர்...

தொடர்ச்சி ▲

மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படவுள்ள நிதி உதவிகள் பற்றியும், அரசின் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் தெளிவுபடுத்தினர்.

இந்த நிகழ்வில் மனித அபிவிருத்தி தாபன இணைப்பாளர் எம்.ஐ.றியால், வேள்வி ஒன்றியத்தின் செயற்பாட்டாளர் எம்.எம். முர்ஷித், வி.சி.பி. நிறுவன பிரதிநிதிகள், தேசிய மக்கள் சக்தி இணைப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இந்தத் திட்டத்தின் ஊடாக சுமார் 2500 பெண்கள் வாழ் வாதார ரீதியாக பயனடைவுள்ளனர். இவர்களைக் கண்காணிப்பதற்காக 25 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.







# அறநெறிப் பாடசாலைகளுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வு

**(உடப்பு க.மகாதேவன்)**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், புத்தளம் மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்தக் கருத்தரங்கும் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமையன்று புத்தளம் இந்து மகா சபை மண்டபத்தில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வை. அநிருத்தனன் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வளவாளராக சைவப்புலவர் கஜேந்திரன் கலந்து கொண்டார். இந்த நிகழ்வுக்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள நிர்வாக உத்தியோகாத்தர் திருமதி இதயராணியும், இந்துமகா சபையின் செயலாளர் திருச்செல்வம், திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகாத்தர் குகதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிழ்வில் வளவாளர் தனது விரிவுரையுடன் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

நிகழ்வின் முடிவில் அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்கான ஏற்பாடுகளை புத்தளம் மாவட்ட இந்து சமய கலாசார அலுவல்கள் அபிவிருத்தி உத்தியோகாத்தர் திருமதி. ர.விமலரஞ்சினி மேற்கொண்டிருந்தார்.







# சுகாதார தேவைகளை நிறைவேற்றுவது சுகாதார நிறுவனங்களின் கடமையாகும்

## பணிப்பாளர் சகீலா இஸ்ஸடீன் தெரிவிப்பு

**(றியாஸ் ஆதம்)**

கல்முனை பிராந்திய மக்களின் சுகாதார தேவைகளை நிறைவேற்றுவது பிராந்திய சுகாதார நிறுவனங்களின் கடமையாகும். அந்த வகையில் சுகாதார நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் தங்களின் பூரண பங்களிப்புக்களை வழங்கி பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டாவது காலாண்டு மீளாய்வுக் கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்றது. இதன் போது உரையாற்றிய போதே பிராந்திய பணிப்பாளர் மேற்படி குறிப்பிட்டார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி

தொடர்ச்சி ▼

## சுகாதார தேவைகளை…

தொடர்ச்சி ▲


சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் நிந்தவூர், சம்மாந்துறை, திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், பிராந்திய பிரிவுத் தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலாண்டில் சுகாதார நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள், அந்தக் காலப் பகுதியில் எதிர்நோக்கிய சவால்கள், பிரச்சினைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இதன்போது முன் வைக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் தேவைகளுக்கு பணிப்பாளரால் உரிய தீர்வும் வழங்கப்பட்டது.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் குறித்த மீளாய்வுக் கூட்டத்தை ஒருங்கிணைப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# யாழ்ப்பாண ஆலயங்களுக்கு தருமபுரம் ஆதீனம்!

(எஸ். நிதர்ஷன்)


யாழ்ப்பாணம் வந்துள்ள தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ 27 ஆவது குருமகா சந்நிதானம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் மற்றும் திருநெல்வேலி நீலாயாதாட்சி சமேத காயாரோகேணேஸ்வரர் கோவில் ஆகியவற்றுக்கு விஜயம் செய்தார்.

இதன்போது தருமபுரி அதீனத்துக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய இணை ஸ்தாபகர் கலாநிதி அப்பையா தேவசகாயத்தின் ஏற்பாட்டில் இந்த விஜயம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பெருமளவிலான அடியவர்கள் கலந்து கொண்டு அதீனத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர்.










# மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் 3,349 ஏக்கர் சிறுபோகச் செய்கை!

## அரச அதிபர் தலைமையில் தீர்மானம்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு முன்னெடுக்கப் படவுள்ள சிறுபோக நெற்பயிர்ச் செய்கை தொடர்பான கூட்டம் நேற்று செவ்வாய்க் கிழமை மன்னார் உயிலங்குளத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் நீர்ப்பாசன திணைக் களத்தின் பணிப்பாளர், வதிவிட முகா மையாளர், விவசாய விரிவாக்கல் பணிப்பாளர், கட்டுக்கரை குளத்தின் திட்டமிட்ட விவசாய அமைப்பு, கமநல சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது பல்வேறு விடையங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு, பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

இவ்வருடம் பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனத்தை உள்ளடக்கியதாக 31 ஆயிரத்து 275 ஏக்கர் நிலத்துக்கு 10 இற்கு 1 என்ற அடிப்படையில் 3349 ஏக்கர் என்ற அளவில் சிறுபோக பயிர்ச் செய்கைக்கு அனுமதிப்பது என்று குறித்த கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

கட்டுக்கரை குளத்தின் நீர் அளவு 30 ஆயிரத்து 982 அடி நீர் காணப் படுகின்ற அதேவேளை 3 அங்குலம் அளவுக்கு நீர் பாய்ந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் அதி உச்ச அளவாக சிறுபோக செய்கையை வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக வாய்க்கால் துப்புரவு மற்றும் பராமரிப்பு போன்றவை 04-05-2025 இற்கு முன்னர் முன்னெடுக் கப்பட வேண்டும் எனவும், முதல் நீர் விநியோகம் 05-05-2025 அன்று ஆரம்பிப்பது எனவும், விதைப்பை 25-05-2025 இற்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மா னிக்கப்பட்டது.

இறுதி நீர் விநியோகம் 24-08-2025 எனவும் தீர்மானிக்கப்பட்டது. சிறுபோகப் பயிர்ச் செய்கைக்கு என்று அனுமதிக்கப்பட்ட அளவில் மாத்திரம் சிறுபோக செய்கை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட் டது.

மேலதிகமாக மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை அடாத்து பயிர்ச் செய்கையாக கருதி கடந்த வருடம் நீதி மன்ற நடவடிக்கைக்கு உற்படுத்தப்பட்டது போல் இந்த முறையும் சட்ட நடை முறைக்கு உற்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் அடாத்து பயிர்ச் செய்கையை மேற்கொள்பவர்களுக்கு எதிராக ஒரு ஏக்கருக்கு 2 லட்சம் ரூபா எனவும் தண் டம் அறவிடப்படும் என்றும் தீர்மானிக் கப்பட்டதோடு, குறித்த விவசாயிகள் விவசாய அமைப்பு ஊடாக 5 வருடங் களுக்கு ஈடுபடாத வகையில் தடை விதிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே அடாத்து பயிர்ச் செய்கையும் நிறுத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக் கப்பட்டுள்ளது. மேலும் சிறு போக பயிர்ச் செய்கையை கருத்தில் கொண்டு, கட்டாக்காலி மாடுகளை தடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் சிறுபோக விவசாயத்தை முன்னெடுக்கும் விவசாயிகள் வேலி அடைத்து, பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்று குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் சிறு போகத்துக்குத் தேவையான உர மானியங்கள் வழங்குவது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மிக சுமூகமான முறையில் குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.







# காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன் காலமானார்



காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனின் தந்தையுமான குமரி அனந்தன் காலமானார். அவருக்கு வயது 93.

கடந்த சில தினங்ககளாக வயது மூப்பு பிரச்சினையால் அவ்வப்போது மருத்துவமனையில் குமரி அனந்தன் சிகிச்சை பெற்று வந்தார். அண்மையில் அவருக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதால், வேலூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி குமரி அனந்தன் காலமானார். இதனை அவரது மகளும் முன்னாள் ஆளுநருமான தமிழிசை உறுதி செய்துள்ளார். குமரி அனந்தன் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம், குமரி மங்கலம் என்ற அகத்தீச்வரத்தில், சுதந்திரப் போராட்டத் தியாகி அரிகிருஷ்ணன் - தங்கம்மாள் தம்பதிக்கு முதல் மகனாக 1933 மார்ச் 19 ஆம் திகதியன்று பிறந்தவர் குமரி அனந்தன். காமராஜரின் சீடராக விளங்கிய இவர், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவராக பொறுப்பு வகித்தவர். மக்கள் நலனுக்காகப் பதினேழு முறை தமிழகம் முழுவதும் நடை பயணம் மேற்கொண்டவர்.

ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வேண்டுமென்று களக்காடிலிருந்து இராதாபுரம் வரை நடை பயணம் மேற்கொண்டு, அதன் விளைவாக 1984 இல் 1.5 ஏக்கர் நஞ்சை நிலம் மற்றும் 2.5 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம் பெற்றுத் தந்தவர். இலக்கியவாதியாகவும் சிறந்த மேடைப் பேச்சாளராகவும் திகழ்ந்தவர்.

1977 ஆம் ஆண்டு நாகர்கோயில் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக 1980, 1984, 1989 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். தமிழகத்தில் பனைவளம் பெருக முழங்கியவர். தமிழகத்தில் மத்திய அரசு அலுவலகப் படிவங்கள் அனைத்திலும் தமிழுக்கு முதலிடம் தரப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, மத்திய அரசின் அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியவர். தமிழகத்தில் தாய்மொழித் தமிழுக்கு எங்கும் முதலிடம் தரப்படவேண்டும் என்று வலியுறுத்தியவர். தமிழக அரசின் மகாகவி பாரதியார் விருது மற்றும் பெருந்தலைவர் காமராஜர் விருது பெற்றவர்.

குமரி அனந்தனுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடந்த ஆண்டு சுதந்திர தின விழாவில் 'தகைசால் தமிழர் விருது' மற்றும் அதற்குரிய பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி சிறப்பித்தார்.



# டுபாய் இளவரசர் முகமது பின் பிரதமர் மோடியுடன் சந்திப்பு

டுபாய் இளவரசர் முகமது பின் ரசீத் 2 நாள்கள் பயணமாக நேற்று டில்லி சென்றுள்ளார். பிரதமர் மோடியின் அழைப்பின் பேரில், டுபாய் இளவரசர் முகமது பின் ரசீத் முதல் முறையாக நேற்று இந்தியா சென்றார். அவரை டில்லி பாலம் விமான நிலையத்தில், மத்திய சுற்றுலா மற்றும் பெட்ரோலியத்துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி வரவேற்றார்.

இளவரசர் முகமது பின் ரசீத்துக்கு, பிரதமர் மோடி நேற்று மதிய விருந்தளித்தார். இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம் இடையே பல துறைகளில் உறவுகளை வலுப்படுத்த இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

டில்லி பயணத்தை முடித்துக் கொண்டு இன்று மும்பை செல்லும் இளவரசர் முகமது பின் ரசீத், மும்பை தொழிலதிபர்களை சந்தித்து கட்டமைப்பு, எரிசக்தி, நிதிதொழில்நுட்பம், புத்தாக்கம் ஆகிய துறைகளில் வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

டுபாய் இளவரசரின் வருகை குறித்து இந்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் கூறுகையில், " டுபாய் இளவரசர் முகமது பின் ரசீத் முதல் முறையாக இந்தியா வந்துள்ளார். அவரது பயணம், இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம் உறவில் மிக முக்கியமானது" என குறிப்பிட்டுள்ளார்.





# டொமினிகன் குடியரசில் இரவு விடுதியின் கூரை இடிந்து விழுந்ததில் 79 பேர் பலி!

டொமினிகன் குடியரசின் தலை நகரான சாண்டோ டொமிங்கோவில் உள்ள இரவு விடுதியொன்றின் கூரை இடிந்து விழுந்ததில் 79 பேர் உயிரிழந்துள்ளனர். 160 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் மாகாண ஆளுநரான ஒக்டேவியோ டொட்டல் உள்ளடங்குகிறார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட இசை





நிகழ்ச்சியின் போதே இவ்வாறு கூரை இடிந்து விழுந்துள்ளது.

இந்த சம்பவம் இடம்பெறும் போது மேற்படி விடுதிக்குள் 500 முதல் 1,000 பேர் வரை இருந்துள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

இந்தநிலையில், இடிபாடுகளுக்குள் சிக்குண்டு காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மீட்புப் பணிகளில் 400 இற்கும் மேற்பட்ட அவசரகால குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# 24 மணி நேர காலக்கெடு முடிவடைந்தது; சீனா மீது அமெரிக்கா 104 வீத வரி விதிப்பு

அமெரிக்கப் பொருள்கள் மீது விதித்த 34 சதவீத பதிலடி வரியை திரும்பப் பெற சீனாவுக்கு விதித்த 24 மணி நேர கெடு முடிந்த நிலையில், சீனா மீது 104 வீத வரி விதிக்கப்படுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சீனா தனது 34 வீத வரி அதிகரிப்பை திரும்பப் பெறவில்லை என்றால், மறுநாள் அதாவது, ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் சீனா மீது 50 வீத கூடுதல் வரிகளை அமெரிக்கா விதிக்கும். கூடுதலாக, சீனாவுடனான அனைத்து பேச்சுவார்த்தைகளும் நிறுத்தப்படும். பிற நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள் உடனடியாக நடைபெறும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று எச்சரித்திருந்தார்.

இந்த நிலையில் .24 மணி நேர கெடு முடிந்தும் அமெரிக்கா மீதான 34 சதவீத வரிவிதிப்பை சீனா திரும்ப பெறவில்லை. இதனையடுத்து சீனா மீது 104 சதவீத வரி விதிக்கப்படுவதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. இந்த வரிவிதிப்பு புதன்கிழமை முதல் அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க பொருள்களின் மீது அதிக இறக்குமதி வரி விதிக்கும் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் பொருள்களுக்கு அமெரிக்காவிலும் அதே அளவுக்கு பரஸ்பர வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். உலக நாடுகளுக்கான இந்த வரி விதிப்பை ஏப்ரல் 2 ஆம் திகதி ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

அதன்படி, இந்திய பொருள்களின் இறக்குமதிக்கு 27 சதவீத பரஸ்பர வரியும், சீனாவுக்கு 34 சதவீதம், வங்கதேசம் 37 சதவீதம், வியட்நாம் 46 சதவீதம், ஐரோப்பிய ஒன்றியம் 20 சதவீதம், ஜப்பான் 24 சதவீதம், இந்தோனேசியா 32 சதவீதம், பாகிஸ்தான் 29 சதவீதம், தாய்லாந்து 36 சதவீதம் என வரி விதிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

10 சதவீத அடிப்படை வரி விதிப்பு ஏப்ரல் 5 ஆம் திகதியிலிருந்தும், கூடுதல் வரி விதிப்பு ஏப்ரல் 9 ஆம் திகதிக்குப் பிறகும் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் இந்த வரி விதிப்புக்கு பல்வேறு நாடுகள் கடும் அதிருப்தி தெரிவித்தன., ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் அனைத்து அமெரிக்க பொருள்களுக்கும் 34 வீத இறக்குமதி வரி விதிக்கப்படும் என்று சீனா அறிவித்தது. அமெரிக்காவின் பரஸ்பர வரி விதிப்புக்கான சீனாவின் பதிலடியாக இது அமைந்துள்ளது என சீன வர்த்த அமைச்சகம் அறிவித்தது.

கனடா முரசு
புதன்கிழமை 09/04/2025

## கனடாவில் சிறிய விமானம் விபத்து; இருவர் உயிரிழப்பு

பிரிடிஷ் கொலம்பியாவின் சில்லிவாக்கில், சிறிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் உறுதி செய் துள்ளனர்.

03



# வரிச் சலுகைகளை வழங்கும் ஒன்றாறியோ மாகாண அரசு

**கனடாவில் ஒன்றாறியோ மாகாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் சில வரிச் சலுகைகளை வழங்குவதாக அறிவித்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**அதன்படி, சில மாநில வரிகளை ஆறு மாதங்களுக்கு தள்ளிவைக்கும் தீர்மானத்தை ஒன்றாறியோ அரசு அறிவித்துள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் ஏற்பட்ட நெருக்கடிகளை சமாளிக்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில மாநில நிர்வாக வரிகள் - பீர், வைன் மற்றும் மதுபான வரி, பெட்ரோல் வரி ஆகியவை - 2025 ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 1 ஆம் திகதி வரை அறவீடு செய்யப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த தீர்மானம் வர்த்தக நிறுவனங்களுக்கு சுமார் 9 பில்லியன் டொலர் வரை பணப்புழக்க நிவாரணம் அளிக்கும் எனவும் வர்த்தக நிறுவனங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என ஒன்றாறியோ முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

மேலும், இது வர்த்தக நிறுவனங்களுக்கு ஆறு மாதங்களுக்கு வட்டியில்லா கடனாக இருக்கும் என நிதி அமைச்சர் பீட்டர் பெத்லென்பால்வி கூறியுள்ளார்.

# கனடாவுக்கு அகதிகளின் வருகை அதிகரிக்கக்கூடும்

## அதிகாரிகள் எச்சரிக்கை




கனடாவின் முக்கியமான எல்லைச் சாவடிகளில் ஒன்றான சென் பெர்னாட் டி லாகொல் St-Bernard-de-Lacolle சாவடியில் அகதிகள் கேட்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் குடிவரவு கொள்கைகள் காரணமாக, கனடாவுக்கு மற்றொரு பெரிய அகதி அலை உருவாகலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து மட்டும், சென் பெர்னாட் டி லாகொல் St-Bernard-de-Lacolle சாவடியில் மார்ச் மாதத்தில் 1,356 மற்றும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வரை 557 அகதி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

ட்ரம்ப் பதவியேற்ற பிறகு ஏராளமானோர் நாடுகடத்தப்பட்டுள்ளனர். மக்கள் பயத்தில் உள்ளனர்.

அவர்களது தற்காலிக குடியுரிமை அமெரிக்காவால் ரத்து செய்யப்படுவதை பற்றிய கடிதங்கள் வந்தவுடனே, அவர்கள் வெளியேற வழிகளை தேட ஆரம்பிக்கின்றனர் என மோன்ட்ரியலில் உள்ள அகதிகள் மற்றும் ஆவணமற்ற குடியாளர்களுக்கு உதவுவதற்காக இயங்கும் குழுவின் பேச்சாளர் பிரான்ஸ் ஆண்ட்ரே தெரிவித்துள்ளார்.

கனடா எல்லை பாதுகாப்பு முகமை (CBSA) தரவின்படி, 2025 இல் ஏப்ரல் 6 வரை 5,246 அகதி விண்ணப்பங்கள் மட்டுமே பெற்றுள்ளதுடன், இது கடந்த வருடம் இதே காலப்பகுதியில் (11,118) இருந்ததைவிட 53 வீதம் குறைவாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் எதிர்வரும் நாள்களில் அகதிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் என எச்சரிக்க விடுக்கப்பட்டுள்ளது.






# டொராண்டோவில் பலப்படுத்தப்படும் ஆபத்தான நாய்கள் தொடர்பான சட்டம்

டொராண்டோ நகரத்தில் ஆபத்தான நாய்கள் தொடர்பான சட்டங்களை மேலும் கடுமையாக்கும் ஒரு புதிய திட்டம் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி குழுவின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட உள்ளது.

கடந்த நவம்பர் மாதம் டோரண்டோ - டான்ஃபோர்த் வார்டின் கவுன்சிலர் பௌலா ஃப்ளெச்சர் இந்த மாற்றங்கள் குறித்த முன்மொழிவை சமர்ப்பித்திருந்தார்.

ஆபத்தான நாய்கள் வசிக்கும் வீடுகளின் கதவுகளில் அவை இருப்பதைப் பற்றிய எச்சரிக்கை பலகை இடுதல், மற்றும் அந்த நாய்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கிய ஒன்லைன் பதிவு அமைப்பை உருவாக்குதல் ஆகியவை இந்த உத்தேச சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களைச் சமர்ப்பிப்பதோடு, கண்டோ குடியிருப்புகளில் உள்ள ஆபத்தான நாய்களின் உரிமையாளர்களுக்கும், அந்தக் கட்டடங்களை நிர்வகிக்கும் நிறுவனங்களுக்கும் இவை குறித்த தகவல்களை நகரம் கடிதமாக அனுப்ப வேண்டும் எனவும் பௌலா ஃப்ளெச்சர் வலியுறுத்த உள்ளார்.

"நகர பொலிஸ் அதிகாரிகள் அந்த கட்டடங்களுக்கு சென்று, எச்சரிக்கை பலகை அமைக்கப்பட்டுள்ளதா என நேரில் சரிபார்ப்பார்கள்," என்று ஃப்ளெச்சர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.




# கனடா தட்டம்மை குறித்து அமெரிக்காவில் எச்சரிக்கை

கனடாவில் தட்டம்மை நோய் நிலைமை குறித்து அமெரிக்காவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின், நியூயோர்க் மாநில சுகாதாரத் துறை இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தட்டம்மை மிகவும் பரவலான தொற்று நோயாக இருப்பதால், இது எல்லைகளை எளிதாக கடக்கிறது என எச்சரித்துள்ளது.

இது தற்போது அமெரிக்கா மற்றும் கனடாவின் சில பகுதிகளில், குறிப்பாக ஒன்டாரியோவில், மற்றும் உலகின் பல பகுதிகளில் பரவி வருகிறது.

இந்நிலையில், ஒன்டாரியோ மாகாணத்தில் இந்த நோய்த்தொற்றில் தற்போது வரை 661 பேருக்கு தட்டமமை உறுதி செய்யப்பட்டுள்ளது இது கடந்த 10 ஆண்டுகளில் பதிவான மிக உயர்ந்த எண்ணிக்கையாகும்.

கடந்த வாரம், 89 புதிய தொற்றுகள் பதிவாகியுள்ளன. அதற்கு முந்தைய வாரத்தில் இது 100 ஆகவும், அதற்கு முந்தைய வாரத்தில் 120 ஆகவும் இருந்தது, எனவே எண்ணிக்கை மெதுவாக குறைவடைந்து வருகிறது.

இந்த தொற்றுப் பரவல் முக்கியமாக தெற்கு ஒன்டாரியோவில் உள்ள Southwestern Public Health Unit பகுதியில் தடுப்பூசி போட்டிராத குழந்தைகளால் ஏற்பட்டிருக்கலாம் எனவும், இது வெயில்காலம் வரை நீடிக்கலாம் எனவும் ஒன்டாரியோவின் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் கியரன் மூர் கூறியுள்ளார்.



# ஒன்டாரியோவில் குளிர்கால புயல்

ஒன்டாரியோ மாகாணத்தில் பல பகுதிகளில் மீண்டும் கடும் குளிர்கால வானிலை தாக்கம் ஏற்பட்டு, பல வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

இதில், டொராண்டோவில் உள்ள நெரிசல் மிக்க வீதியொன்றில் ஆறு வாகனங்கள் சிக்கிய பெரிய விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

என்விரோன்மென்ட் கனடா, டொராண்டோ, லண்டன் மற்றும் தெற்கு ஜார்ஜியன் பே வளையம் உள்ளிட்ட பகுதிகளுக்கு வானிலை எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த பகுதிகளில் அதிகபட்சம் 5 செ.மீ. வரையிலும், ஓவன் சவுண்டிற்கு கிழக்கிலுள்ள பகுதிகளில் 10 செ.மீ. வரை பனிப்பொழிவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காலை வேளையில் பயணிக்க வேண்டியவர்கள் மெதுவாகவும், எச்சரிக்கையோடும் வாகனங்களை செலுத்த வேண்டுமென பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர், ஏனெனில் பல்வேறு இடங்களில் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

டொராண்டோவில் நேற்று டான் வாலி பார்க்வே சாலையின் தெற்குப் பகுதியிலேயே 6 வாகனங்கள் சிக்கிய விபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் 30 அன்று ஏற்பட்ட பனிப் புயலுக்குப் பின்னும், Hydro One நிறுவனத்தின் 35,000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இன்னும் மின் இணைப்பு இல்லாமல் தவிக்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.








## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்லிவாக் ஏரிக்கரை அருகே ஒரு விமானம் விபத்துக்குள்ளானதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அந்த பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, விழுந்து கிடந்த செஸ்னா 172 வகை விமானம் கண்டுபிடிக்கப்பட்டதாக சில்லிவாக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமானத்தில் இருந்த இருவரும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தகவலைத் தொடர்ந்து, கனடிய ஆயுத படைகளின் கூட்டு மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (Joint Rescue Coordination Centre - JRCC) உயிரிழந்தவர்களை அந்த இடத்திலிருந்து மீட்க நடவடிக்கைகள் மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமானத்துடனான தொடர்பு முழுமையாக இழக்கப்பட்டதாகவும் அதன் பின்னர் விமானம் விபத்துக்குள்ளானது தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் (Transportation Safety Board of Canada) மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் மரண விசாரணை சேவையும் (B.C. Coroner's Service) இந்த விபத்து குறித்த விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களது விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை.